[14th February 1958

* 125-B *Q.*—Sri A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) when the Government propose to introduce legislation regarding land reforms; and

(*b*) the reasons for the delay in introducing land reforms?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) & (*b*) Several measures of land reforms have already been enacted. If the hon. Member is referring to the question of fixing ceilings for land-holdings, I may say that the matter is under the active considera-tion of the Government. A Bill in this behalf will shortly be introduced.

Sri A. GOVINDASAMY : நிலச் சீர்திருத்தச் சட்டம் சம்பந்தமாக அடிப்படையிலே சட்டம் கொண்டுவருவோம் என்று சொல்லி, இரண்டு திட்டங்களை நிறைவேற்றிவிட்டார்கள். ஆனால், மூன்றாவது திட்டமாகிய நில உச்ச வரம்பு கட்டுவதிலே ஏன் காலம் கடத்தப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : மூன்றாவது கட்டத்தையும் நிறைவேற்றுவதற்காக ஒரு மசோதா வருகிறது என்று முன்பே சொன்னேன்.

Sri R. SRINIVASA IYER : Sir, I desire to know whether Government have gathered statistics on the net income per acre of land under the several 'tharams' in the State?

The Hon. Sri M. A. MANICKAVELU : Not specifically on the lines, Sir. The Government have got some knowledge of income from lands. According to it, it is a rough estimate.

Sri A. GOVINDASAMY : அதிகப்படியாக நிலம் வாங்கக்கூடாது என்று நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்து சட்டம் கொண்டுவரப் போகிறார்களா ? அல்லது, யாராவது மேற்கொண்டு நிலம் வாங்குவதாக அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்து, சட்டம் கொண்டுவரப்போகிறார்களா ? அல்லது நிலசுவான்தார்களுக்கு எச்சரிக்கையாக சட்டம் கொண்டுவரப் போகிறோம் என்று சொல்கிறார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அம்மாதிரி யாராவது வாங்கினார்களா என்று ஆராயவில்லை.

Sri K. R. NALLASIVAM : நிலச் சீர்திருத்த சட்டம் வருகிறது என்று தெரிந்து இப்போதே நிலச்சுவாந்தார்கள் தங்களிடம் அதிகப்படியாக இருக்கும் நிலங்களை விற்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால், எந்த நோக்கத்திற்காக சட்டம் கொண்டுவரப்படுகிறதோ, அதை நிறைவேற்றப்படமுடியாமல் போகலாம். இம்மாதிரி அதிகபட்சமாக நிலம் உள்ளவர்கள் நிலத்தை விற்பதால், சட்டத்தின் முழுப்பயன் கிடைக்காமற் போகும். ஆதலால், அதைத் தடுக்க ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்பொழுது வரப்போகிற மசோதா அதைத் தடுக்கும். சட்டத்தின் உதவி இல்லாமலேயே இம்மாதிரி கொஞ்ச கொஞ்சமாகப் பிரித்தால் நல்லதுதானே.

Sri R. SRINIVASA IYER : Sir, I desire to know whether the Government have come to any decision as to the imposition of a ceiling either income or extent irrespective of the income from the land.

14th February 1958]

THE HON. SRI M. A. MANICKAVELU : That will be actually finalised when the Bill is brought. But, we are now oscillating between these two or three things.

SRI T. T. DANIEL : May I know whether the Government have taken into account the nature of holdings and income in Kanyakumari district and whether the Government have any idea of excluding certain categories like plantations, properties to be held in trust and so on?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, the tenure is different in Kanyakumari district. I am trying to study and know it. Then only I will be able to tell anything specific on it.

SRI K. VINAYAKAM : While fixing a ceiling on the land holdings of an individual, will the Government adopt a uniform policy for the entire State and say that one individual can have only so many acres of wet land and so many acres of dry land in the entire district or will they adopt a policy or principle based on the fertility of the land according to the peculiar circumstances prevailing in each district.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, all these aspects of the question will be taken into consideration and finally a decision will be taken.

SRI A. GOVINDASAMY : இது விஷயமாக ஒரு முடிவுக்கு வருவதற்கு அரசாங்கத்தின் கொள்கை ஊசலாட்டத்தில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால், அந்த ஊசலாட்டம் எப்பொழுது நின்று, ஒரு நல்ல முடிவுக்கு அரசாங்கம் வரும் என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஊசலாட்டம் என்று சொன்னதற்குக் காரணம் என்னவென்றால், **family holding**ஐ வைத்துக் கொள்வதா ? **Economic holding**ஐ வைத்துக்கொள்வதா ? வருமானத்தை வைத்துக்கொள்வதா ? அல்லது நில விஸ்தீர்ணத்தை அடிப்படையாக வைத்துக்கொள்வதா ? என்ற பிரச்னைகளெல்லாம் வரும் போது, இன்னும் அதைப்பற்றி முடிவுக்கு வரவில்லை என்பதற்காகத்தான்.

SRI A. VEDARATHNAM : கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது, மேலும் நிலம் வாங்க யாரேனும் முன்வருகிறார்களா என்ற விஷயத்தை ஆராயவில்லை என்று சொன்னார்கள். எல்லோரும் நிலத்தை விற்க முற்படும் இந்த நேரத்தில் நிலம் வாங்குபவர்களே இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அப்படியிருக்க இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டிய அவசியமென என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இம்மாதிரி சட்டம் ஏற்பட்டால்தான் பொதுமக்களுக்கு நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயிப்பது பற்றிய அரசாங்கத்தினுடைய கொள்கை தெரியும், அதுவரைக்கும் அது நல்லதுதான் என்று நினைக்கிறேன்.

SRI N. K. PALANISAMI : டில்லியில் நடந்த கூட்டத்தில் நம் மாகாணத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவருவதற்குத் தடங்கலாக இருந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்போது நஷ்ட ஈடு கொடுப்பது சம்பந்தமான அரசியல் சட்டத்தின் 51, 51. ஏ பிரிவு பற்றி விவாதிக்கப்பட்டதா ? அதுபற்றி என்ன முடிவு செய்யப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தக் கூட்டத்திலே அனேக விஷயங்கள் விவாதிக்கப்பட்டன; **family holding and economic holding,** வருமானம், உச்ச வரம்பு நிர்ணயிப்பது போன்ற இம்மாதிரி அனேக விஷயங்கள் அதிலே விவாதிக்கப்பட்டன.

SRI A. R. SUBBIAH MUDALIAR : தமிழ் நாட்டில் உள்ளவர்களைப் பொறுத்தவரையில் உச்ச வரம்பு கட்டுவது நிலத்திற்கு மட்டுமா அல்லது தொழிலின் மூலம் வரக்கூடிய வருமானத்திற்குமா ? சொத்தின்பேரில் அதன் வருஷ வரும்படியின் அடிப்படையில் வரம்பு கட்டுவதற்கு ஏதாவது திட்டம் இருந்துக்கொண்டிருக்கிறதா ? உச்ச வரம்பு கட்டுவது நிலத்திற்கு மட்டும் இருக்கிறதா ? மற்ற சொத்துகளின் மூலம் வரக்கூடிய வருமானத்திற்கும் உச்ச வரம்பு இருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : வருமானத்திற்கு உச்ச வருமானம் என்று நிர்ணயித்தால் அப்பொழுது வருமானத்தைப்பற்றி இருக்கும். அப்படி இல்லாமல் நில விஸ்தீர்ணத்தைப்பற்றி சட்டம் செய்யும் போது, அதன் வருமானத்தைப்பற்றி கவனிக்கவேண்டிய அவசியம் இல்லே.

Sri Shanmugar Mills, Rajapalayam

* 105 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Sri Shanmugar Mills, Rajapalayam, has been locked out since 29th October 1957;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) what action the Government have taken to re-open the Mills?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The management has closed down the Mills from 29th October 1957.

(*b*) According to the management the Mill was closed for financial reasons.

(*c*) Under the present law, Government cannot prevent a management from closing down its business. However the issue, whether the closure of the Mill is justified and to what relief the workers are entitled, has been referred for adjudication to the Industrial Tribunal, Madras.

Sathanur Project

* 106 *Q.*—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of acres of land newly benefited in North Arcot and South Arcot districts by the construction of the Sathanur Reservoir Project;

(*b*) whether the Government have received any representation recently to the effect that after the construction of the Sathanur Project some parts in the South Arcot district, which have been already getting irrigation facilities from the Pennar, have been affected; and

(*c*) if so, the action taken thereon?